K தினமலர் திருச்சி 10-9-2013

# நரம்பு தசை சிதைவு நோய் விழிப்புணர்வு முகாம்

குளித்தலை: குளித்தலை அருகே அய்யர்மலை அரசு கலைக்கல்லூரியில் குழந்தையை தாக்கும் நரம்பு தசை சிதைவு நோய் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடந்தது. முதல்வர் செல்வராஜ் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் ஜெகதீசன், செங்குட்டுவன், கோவிந்தராஜ், டோம்னிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். என்எஸ்எஸ் அலுவலர் மகேந்திரன் வரவேற்றார். மரபணு பரிசோதனை ஆலோசனை மற்றும் ஆராய்ச்சி குறித்து கோவை குறிஞ்சி மருத்துவமனை ஆலோசகர் ஆர்த்தி பேசினார். மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் குளித்தலை வட்டார பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நேரடியாக சென்று குழந்தைகளை தாக்கும் நரம்பு தசை சிதைவு நோய் தாக்கிய குழந்தைகளை கண்டறிந்து இந்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வழங்குவர்.



அய்யர்மலை அரசு கலைக்கல்லூரியில் நடந்த குழந்தைகளை தாக்கும் நோய் பற்றிய விழிப்புணர்வு முகாமில் ஆலோசகர் ஆர்த்தி மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். அருகில் கல்லூரி முதல்வர் செல்வராஜ் மற்றும் பலர்.